**<u>கண்ணகி நகருக்கு அருகாமையில் புதிதாக கட்டமைக்கப்பட்ட மறுகுடியமர்வு பகுதியான எழில் நகரின் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளின் நிலை குறித்த மதிப்பீடு</u>**

மே'15 மற்றும் அக்டோபர்'15 மதங்களில், டிரான்ஸ்பெரன்ட் சிட்டீஸ் நெட்வொர்க் (TCN@CAG) செய்த உண்மை நிலை ஆய்வின் சுருக்க வடிவு இது. சுமார் 78,280 மக்கள் வாழ்ந்து வரும் 15,656 குடியிருப்புகளை உள்ளடக்கியது கண்ணகி நகர். 2013-ஆம் ஆண்டு கண்ணகி நகருக்கு அருகாமையில் புதியதாக மேலும் ஒரு மறுகுடியமர்வு பகுதி எழில் நகர் என்ற பெயரில் சுமார் 8,048 அடுக்குமாடி குடியிருப்புகளுடன் தோற்றுவிக்க பட்டது. தற்போதய நிலவரப்படி இதில் 2,650 குடியிருப்புகளில் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். . எனினும் எழில் பிரத்யேகமாக எந்த வசதிகளும் செய்து தரப்படவில்லை. கண்ணகி நகருக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை எழில் நகர் குடியிருப்பு பகுதி மக்களும் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படுட்டுள்ளது. ஆகவே கண்ணகி நகரில் உள்ள அடிப்படை வசதிகளை கண்ணகி நகர் மற்றும் எழில் நகர் பகுதியை சேர்ந்த 23,704 குடியிருப்புகளில் வசிக்கும் சுமார் 1,18,520 மக்கள் பற்றாகுறையுடன் பயன்படுத்தி வருகின்றனர். எழில் நகர் மறுகுடியமர்வு பகுதியில் இருக்கும் வசதிகளின் தரம் மற்றும் போதுமான நிலைக் குறித்த மதிப்பீடு இந்த தொகுப்பில் வழங்கப்பட்டுள்ளது.

- **கட்டிட வடிவமைப்பின் குறைபாடுகள்:** எழில் நகரில் ஏற்படுத்தப்பட்டுள்ள குடியிருப்புகள் ஒரு தளத்திற்கு 24 வீடுகள் என 4 அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளாக கட்டப்பட்டுள்ளன கட்டிடங்களில் மின்தூக்கி வசதியில்லை. இங்குள்ள குறுகலான படிக்கட்டுகள் மாற்றுத்திறனாளிகளுக்கும் முதியவர்களுக்கும் பாதகமாக உள்ளது. நெருக்கமான கட்டமைப்பால் வீடுகளுக்கு முன்பு உள்ள நீண்ட நடைபாதைகள் விளக்குகளின்றி இருள் சூழ்ந்துள்ளது

- **தண்ணீர் மற்றும் சுகாதாரம்:** மேல்நிலைத் தொட்டிகள் மூலமாக இரண்டு நாட்களுக்கு ஒருமுறை அதுவும் 2 மணி நேரத்திற்கு மட்டுமே தண்ணீர் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுப்பிலும் கழிவறை/குளியலறைக்கென்று ஒரு குழாய் பொருத்தப்பட்டுள்ளது. தரைத்தள வீட்டுத்தொகுப்புகள் கழிவுநீர் குழாயுடன் இணைக்கப்பட வில்லை. மேலும் பயன்பாட்டில் இருக்கும் குழாய்கள் பழுதுபட்டு சீரமைக்கப்படாமல் உள்ளன. இத்தகைய வடிகால் பழுதால் குடியிருப்புகளை சுற்றி கழிவுநீர் தேக்கம் ஏற்படுகிறது. தேங்கி நிற்கும் கழிவு நீரினால் எல்லா இடங்களிலும் கொசுத்தொல்லை அதிகரித்து மக்களின் சுகாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது

- **சாலைகள்:** எழில் நகர் பகுதி முழுவதும் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. சில தெருக்களில் சாலைகளே இடப்படவில்லை. சாலைகள் உள்ள பகுதிகளும் குண்டும் முழியுமாக மழைநீர் மற்றும் கழிவு நீர் தேங்கி பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

- **அங்கன்வாடி:** எழில் நகரின் தற்போதைய மக்கள்தொகைக்கு 16 அங்கன்வாடிகள் தேவைப்படும் நிலையில் இங்கு அரசால் நடத்தப்படும் 1 அங்கன்வாடி மற்றும் ஆஷா நிவாஸ் என்னும் தொண்டு நிறுவனத்தால் 3 அங்கன்வாடிகள் என மொத்தம் 4 அங்கன்வாடிகள் மட்டுமே செயல்படுகின்றன.. கண்ணகி நகரில் 19 அங்கன்வாடிகள் அரசினாலும் 15 அங்கன்வாடிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான மையம்

ஒன்றும் அரசு சாரா நிறுவனங்களாலும் நடத்தப்படுகிறது. இந்த மையங்கள் முறையற்ற கட்டமைப்புகளோடும் அனைத்துக் குழந்தைகளும் பயன்பெற இயலாத போதாத வசதிகளோடும் உள்ளன. மேலும் கண்ணகி நகர் மற்றும் எழில் நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடிகள் கர்ப்பிணி மற்றும் பிரசவித்த பெண்களுக்கு சத்துமாவை வழங்குகிறது. ICDS திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சேவைகள் (தடுப்பூசி, மருத்துவ பரிசோதனை, சத்துணவுக் கல்வி) எதுவும் இங்குள்ள வளரிளம் பெண்கள்/கர்ப்பிணி மற்றும் பிரசவித்த பெண்களுக்கு வழங்கப்படவில்லை.

- **பள்ளிகள்:** எழில் நகரில் 1 ஆரம்பப் பள்ளி ஜூன் 2015 முதல் செயல்பட்டுவருகிறது. இந்த பள்ளியில் சுமார் 160 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். வெறும் 2 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளதால் முதல் மற்றும் இரண்டாம் வகுப்புகள் ஒன்றாகவும், மூன்று மற்றும் நான்காம் வகுப்புகள் ஒன்றாகவும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த பள்ளியில் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதி ஏதும் இல்லை. மேசை நாற்காலிகள் இல்லாததால் குழந்தைகள் தரையில் அமர்ந்து படிக்கும் நிலை உள்ளது.. கண்ணகி நகரில், அரசு மேல்நிலை பள்ளி ஒன்றும், தொடக்கப்பள்ளி மூன்றும் தேவைக்கு அதிகமான குழந்தைகளுடன் நடத்தப்படுகின்றன. எழில் நகரில் இருந்து வெறும் 43 குழந்தைகள் மட்டுமே அரசு பள்ளியில் பயில்கின்றனர். சிலர் அருகாமையில் உள்ள தனியார் பள்ளிகளுக்கும், பெரும்பாலாணோர் இரண்டு மணிநேரத்திற்குமேல் பயணம் செய்து இடமாற்றத்திற்கு முந்தைய பள்ளிகளில் கல்வியை தொடர்கின்றனர்.

- **பொது விநியோகத் திட்டம்:** எழில் நகரில் வெறும் 1 கடை மட்டுமே செயல்பட்டுவருகிறது இதில் சுமார் 1600 அட்டைதாரர்கள் பயன்பெறுகிறார்கள் மற்ற அனைவரும் இன்னும் கண்ணகி நகரில் அமைந்துள்ள கடைகளில் தான் பொருட்களை வாங்குகிறார்கள். கண்ணகிநகரிலுள்ள 7 கடைகளில் 2-யை எழில் நகர் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இக்கடைகள் கூட்டநெரிசலோடும் பலசரக்கு வழங்குவதில் பற்றாகுறையுடனும் உள்ளதாக மக்கள் பகிர்ந்து கொண்டனர்.

- **மருத்துவச்சேவை**: கண்ணகி நகர் மற்றும் எழில் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. எழில் நகர் அருகில் ஒரு துணை சுகாதார நிலையம் கட்டப்பட்டுள்ளது. இது அதிகாரபூர்வமாக திறக்கப்பட்ட நிலையிலும் இன்னும் செயல்பாட்டுக்கு வரவில்லை, மாநகராட்சியின் மருந்தகம் ஒன்று கண்ணகி நகரில் உள்ளது. 3 கி.மீ. தொலைவிலுள்ள துரைப்பாக்கத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம், OMR பகுதி மக்கள் அனைவருக்கும் சேவை அளித்து வருவதால் இங்கும் கூட்ட நெரிசலுடனே காணப்படுகிறது. அரசு மருத்துவமனைக்கு மக்கள் 2 மணிநேரத்திற்கு மேல் பேருந்தில் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

- **பாதுகாப்பு:** எழில் நகர் பகுதியில் பல திருட்டு சம்பவங்கள் நடந்தபோதிலும் காவல்துறை அதிக கவனம் செலுத்தவில்லை. கழிவறை பைப்புகள், ஜன்னல் கதவுகள் கூட திருட்டு

போவதாக மக்கள் கூறுகின்றனர். மேலும் குடிப்புகாத குடியிருப்புகள் சமூக விரோத செயல்களுக்கு பயன்படுத்தபடுவதாக மக்கள் தெரிவித்தனர்.

- **போக்குவரத்து:** எழில் நகரை விட்டு ஒரு கி.மீ. தொலைவிலுள்ள கண்ணகி நகரில் பேருந்து நிலையம் உள்ளது. சில முக்கிய வழித்தடங்களில் (கோயம்பேடு, தாம்பரம்) பேருந்துகள் இயக்கப்படவில்லை. இங்கும் கூட்ட நெரிசலுடன் போதிய தேவையை சமாளிக்க இயலாத விதமாகவும் உள்ளது. இவர்கள் நகரத்திற்கு வருவதற்கு 2 மணிநேரத்திற்கு அதிகமாகவும், அதிக செலவும் செய்ய வேண்டியுள்ளது.

- **வாழ்வாதாரம்**: இம்மக்கள் தங்கள் முந்தைய வேலையை தொடர பயணத்திற்கு அதிக பணமும் நேரமும் செலவிடுகிறார்கள் (உதாரணத்திற்கு - எழில் நகர் பிராட்வே-லிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது). இதனால் பலர் தங்கள் வேலையை இழந்துள்ளனர்.

மேற்கண்ட தகவல்களின் படி எழில் நகரில் அடிப்படை வசதிகள் மிக மோசமான நிலையில் உள்ளன. இதன் மூலம் மக்களை இந்நிலையில் குடியமர்த்துவது சாதகமற்றது என்பது தெளிவாகிறது. நாங்கள் மே மாதம் செய்த ஆய்விற்கு பிறகு ஒரு ஆரம்ப பள்ளிக்கூடம் மற்றும் ஒரு 1 நியாய விலை கடை என்று புதிய வசதிகள் நிருவபட்டிருந்தாலும் இது அங்கு வசிக்கும் மக்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லை என்பது உண்மை. மேலும் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் முன்பை காட்டிலும் மிகவும் மோசம் அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.